விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

# நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவகம் (ACCIMT)

## வெற்றிடம்

## பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி பதவி

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவகமானது (ACCIMT) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்பட்ட தற்போது இயங்கும் சட்டரீதியான சபை ஒன்றாகும். இந்த நிறுவகமானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தின் ஊடாக மின்னணுவியல், தொடர்பாடல்கள், தகவல் தொழில்நுட்பம், Robotics மற்றும் விண்வெளி தொழில்நுட்பத் துறைகளில் நாட்டில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தலை விரைவுபடுத்துவதை திட்டமாகக் கொண்டுள்ளது.

**பின்வரும் பதவிக்காக பொருத்தமான தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இந்த நிறுவகம் அழைப்பு விடுக்கிறது.**

**பணியாளர் பிரிவு :** சிரேஷ்ட முகாமையாளர்

பணியாளர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளின் பண்பு குறித்த பொதுவாக வரையறை: பணிப்பாளர் நாயகம் (CEO) நிறுவகத்தின் உயர்மட்ட நிறைவேற்று அதிகாரியாவார்.

பணிப்பாளர் நாயகம் (CEO) நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகள், நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்கள் அனைத்திற்கும் பொறுப்புக்கூறத்தக்கவராகவும் பொறுப்பானவராகவும் இருப்பார். பணிப்பாளர் சபையின் பொதுவான வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், பணிப்பாளர் சபையினால் அவருக்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பயன்படுத்தி, நிறைவேற்றி, மேற்கொள்வதுடன், உத்தியோகபூர்வ சாதனைகள் மற்றும் தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பரிமாற்றத்தில் சிறந்து விளங்குவதற்காக நிறுவனத்தின் பணியாளர்களுக்கு தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்குவார்.

**பதவியின் பிரதான பணியில் அடங்குவன**

- நிறுவகத்தின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் நிதி கட்டுப்பாடு.
- வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு திட்ட முறைமை மற்றும் நேரடி வழிகாட்டலை வழங்கல்.
- கொள்கை விடயங்கள் தொடர்பில் சபைக்கு ஆலோசனை வழங்கல்.
- தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுக்கு பங்கேற்றல்.
- தொடர்புடைய மற்ற நிறுவனங்களின் சபைக் கூட்டங்களில் பங்கேற்றல்.
- சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்புபட்ட வேலையில் பங்கேற்றல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டறைகள் முதலியவற்றில் பங்கேற்றல்.
- அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை சமர்ப்பித்தல்.
- ஆளுநர்கள் சபை மூலம் ஒதுக்கப்படும் ஏனைய எந்தவொரு பணிகளும்.

**நியமன பண்பு:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாக (1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 27(2) மற்றும் 27(4) பிரிவுக்கு அமைய ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு செல்லுபடியான) நிரந்தரமானது.

**சம்பள அளவு :**

பணியாளர் பிரிவின் சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு (2027.01.01 முதல் முழுமையாக நடைமுறைக்கு வரும் வகையில் - 01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபம்)

**HM 2-3:** ரூபா 173,000 – 12 x 4,850 – 231,200

**அடிப்படைச் சம்பளம்:** ரூபா 150,325/= + ரூபா 17,800/= கூடுதலாக (வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு) + அரச சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு பொருந்தும் ஏனைய மற்ற கொடுப்பனவுகள்).

**தகைமைகள்:**

***வெளிவாரி (கீழுள்ள 1 அல்லது 2)***

1. (a) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் இணை உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட, இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தொடர்புடைய பொறியியல் துறை ஒன்றில் இருந்து (மின்னணுவியல்/ தொலைத்தொடர்பாடல் அல்லது தொடர்புடைய துறை ஒன்றில் பொறியியலில் நான்கு ஆண்டு முழுநேர விஞ்ஞான இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(b) விண்ணப்பதாரர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் தகுதியைப் பெறக்கூடிய, இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடத்தப்படும் பரிந்துரைக்கப்பட்ட பொறியியல் துறைக்கு தொடர்புடைய பரீட்சையின் அனைத்து பாகங்களையும் பூர்த்தி செய்தல் மற்றும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(c) பொறியியலில் பட்டய அந்தஸ்தைப் பெறுவதற்கு ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் கௌன்சில் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் கௌன்சில் மூலம் பரிந்துரைக்கப்பட்ட கல்விசார் தேவைகளை பூர்த்தி செய்துள்ள தொடர்புடைய பொறியியலில் அதன் இணை நிறுவன பரீட்சையை முழுமையாக பூர்த்தி செய்து மற்றும் அனைத்து பாகங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(d) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்திற்காக அபேட்சகர் தகைமையை பெறும் வகையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பொறியியலில் விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கு நிகரான பொறியியல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(e) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தொடர்புடைய துறை ஒன்றில் (பௌதிகவியல்/ வானியல்/ விண்வெளி விஞ்ஞானம்/ புவி அளவியல்/ கணிதம் அல்லது தொடர்புடைய துறை) நான்கு ஆண்டு முழுநேர விஞ்ஞான இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தொடர்புடைய துறை ஒன்றில் PhD பட்டம் அல்லது பட்டய பொறியியலாளர் ஒருவராக தொழில்முறை பதிவு மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தில் அங்கத்துவம் (CEng., FIESL).

மற்றும்

பொறியியல்/ விஞ்ஞானி அல்லது அதனையொத்த திறன் ஒன்றின் ஒத்த தன்மையுடைய பணி அனுபவமாக குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம், அதில் அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் பல்துறை குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய திறன் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பணியமர்த்திய மற்றும் திறமையாக நிர்வகித்த நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. (a) இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் இணை உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட, இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தொடர்புடைய பொறியியல் துறை ஒன்றில் இருந்து (மின்னணுவியல்/ தொலைத்தொடர்பாடல் அல்லது தொடர்புடைய துறை ஒன்றில் பொறியியலில் நான்கு ஆண்டு முழுநேர விஞ்ஞான இளமாணிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது

(b) விண்ணப்பதாரர் இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் இணை உறுப்பினர் தகுதியைப் பெறக்கூடிய, இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தினால் நடத்தப்படும் பரிந்துரைக்கப்பட்ட பொறியியல் துறைக்கு தொடர்புடைய பரீட்சையின் அனைத்து பாகங்களையும் பூர்த்தி செய்தல் மற்றும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(c) பொயியலில் பட்டய அந்தஸ்தைப் பெறுவதற்கு ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் கௌன்சில் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல் கௌன்சில் மூலம் பரிந்துரைக்கப்பட்ட கல்விசார் தேவைகளை பூர்த்தி செய்துள்ள தொடர்புடைய பொறியியலில் அதன் இணை நிறுவன பரீட்சையை முழுமையாக பூர்த்தி செய்து மற்றும் அனைத்து பாகங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(d) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்திற்காக அபேட்சகர் தகைமையை பெறும் வகையில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது வேறு ஏதேனும் பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பொறியியலில் விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கு நிகரான பொறியியல் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

இலங்கை பொறியியல் நிறுவனத்தின் பட்டய பொறியியலாளர் மற்றும் கூட்டு அங்கத்தவர் ஒருவராக தொழில்முறை பதிவு (CEng., MIESL) அல்லது ஐக்கிய இராச்சியத்தின் (UK) பொறியியல் கௌன்சிலின் பட்டய பொறியியலாளர் ஒருவராக தொழில்முறை பதிவு மற்றும் UK இல் தொடர்புடைய துறையில் தொழில்முறை பொறியியல் நிறுவனம் ஒன்றின் கூட்டு அங்கத்துவம்.

மற்றும்

பொறியியல் அல்லது அதனையொத்த திறன் ஒன்றின் ஒத்த தன்மையுடைய பணி அனுபவமாக குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம், அதில் அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் பல்துறை குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய திறன் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பணியமர்த்திய மற்றும் திறமையாக நிர்வகித்த நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 10 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

வர்த்தக நிர்வாகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**உள்ளக**

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ (HM 2-2) பிரிவில் (தொழில்நுட்ப செயற்பாடுகள்/ திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி/ விண்வெளித் தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகள்) பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவி ஒன்றில் குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**மற்றும்**

பல்துறை குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறன் ஒன்று. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக பணியமர்த்தல் மற்றும் திறம்பட நிர்வகிப்பதில் அனுபவம்.

**குறிப்பு :** வர்த்தக நிர்வாகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மற்றவை:**

அனைத்து விண்ணப்பதாரர்களும்,

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு உரிய பணிகளை மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள்**

a) EPF – பணியாளர் 10%; ACCIMT 15%
b) ETF – ACCIMT 3%
c) தொடர்புடைய தொழில்முறை நிறுவனத்தில் அங்கத்துவ கட்டணத்தை மீள்நிரப்பல்.
d) குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு மருத்துவ திட்டத்தை உள்ளடக்கிய உள்ளக/ வெளி மருத்துவ சிகிச்சை.
e) பொருந்தும் அரச சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு எரிபொருள் கொடுப்பனவுடன் உத்தியோகபூர்வ வாகன வசதி அல்லது எரிபொருள் கொடுப்பனவுடன் போக்குவரத்து கொடுப்பனவு வழங்கப்படும்.

**இறுதித் திகதி: 2026.09.28**

**விண்ணப்பிக்கும் முறை :**

அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் அதிகாரிகள் குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து நிழல்பிரதி சான்றிதழ்களின் ஆதரவுடன் முழுமையான சுயவிபரக் கோவையை வழங்கும் விண்ணப்பங்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பணிப்பாளர் நாயகம் மற்றும் CEO பதவி'' என்று குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**
**3ஆவது மாடி,**
**1ஆவது கட்டம்**
**“செத்சிறிபாய”**
**பத்தரமுல்லை.**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED